**நீதித்துறை நடுவர் எண் 1 நீதிமன்றம், நாகப்பட்டினம்**

முன்னிலை : திரு. M. நாகப்பன், B. Sc. L.L.M., M.B.A.,

நீதித்துறை நடுவர் எண் 1, நாகப்பட்டினம்.

2022 ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 19 -ம் நாள், திங்கள் கிழமை

திருவள்ளுவர் ஆண்டு 2053

ஸ்ரீசுபகிருது வருடம் மார்கழி மாதம் 04 ம் நாள்

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்: 983/2022**

C.N.R. No: TNNGO20084212022

அரசுக்காக - காவல் உதவி ஆய்வாளர்,

நாகப்பட்டினம் நகர காவல் நிலையம் (குற்ற எண் 586/2021) .....குற்ற முறையிடுபவர்

-எதிராக-

காளிதாஸ் (வயது 38/2022) - S/o. வீரையன்,

மதகடி தெரு, பாப்பாகோவில், நாகப்பட்டினம். ...எதிரி

*******

கடந்த 27.09.2022 அன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்ட இவ்வழக்கில், அரசுத்தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை 2 திருமதி. V.தனலெட்சுமி அவர்கள் ஆஜராகியும், எதிரிதரப்பில் வழக்கறிஞர் திரு. P.R. நடேச ஜெயராமன் அவர்கள் ஆஜராகியும், இறுதியாக இவ்வழக்கு இன்றைய தினத்தினில் இந்நீதிமன்றத்தின் முன்பாக விசாரணைக்கு வரப்பெற்று, ஆவணங்களை நன்கு பரிசீலித்தும், இருதரப்பையும் கேட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்ற கவனமாக பரிசீலனையில் இருந்துவந்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்......

**தீர்ப்புரை**

1. இவ்வழக்கானது நாகப்பட்டினம் நகர காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்கள் எதிரிக்கு எதிராக இந்திய தண்டனை சட்ட பிரிவுகள் 294 (b), 324, 506 (ii) ஆகிய பிரிவுகளின் கீழ் குற்ற எண் 586/2021 என்ற குற்ற எண்ணில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இறுதியறிக்கையின் பேரில் தொடரப்பட்டதாகும்.

M NAGAPPAN Digitally signed by M NAGAPPAN Date: 2022.12.19 15:56:43 +0530

2. **இறுதியறிக்கையில் கண்டுள்ள குற்றச்சாட்டுகளின் சுருக்கம்** :
கடந்த 04.07.2021-ம் தேதியன்று இரவு 09.45 மணியளவில் இவ்வழக்கின் முதல் தகவலாளியான பழனி என்பவர் பாப்பாகோவில் ஆர்ச் அருகே அமைந்துள்ள பழனியப்பன் பெட்டிக் கடைக்கு பால் வாங்க வந்திருந்த போது, இவ்வழக்கின் எதிரியானவர் வெளியூர்காரனுக்கு இங்க என்னடா வேலை தேவடியா மகனே என்று ஆபாசமாக பேசி கையால் தள்ளி விட்டதாகவும், அதுகுறித்து கேட்டறிந்த பட்டியல் சாட்சி அருண்குமார் என்பவரை கட்டையால் அடித்து தாக்கியதாகவும், அதனை தடுக்க முற்பட்ட மேற்படி முதல்தகவலாளியான பழனி என்பவரை பேனா கத்தியால் நெஞ்சின் இடது பக்கத்தில் மாறி மாறி குத்தி சொற்பகாயத்தை ஏற்படுத்தி கொல்லாமல் விடமாட்டேன் என கொலைமிரட்டல் விடுத்திருந்ததாகவும் குறிப்பிட்டு எதிரிக்கு எதிராக இவ்வழக்கின் இறுதியறிக்கையானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. அரசுத்தரப்பில் தாக்கல் செய்யப்பட்டிந்த இறுதியறிக்கை மற்றும் அதனுடன் இணைக்கப்பட்டிருந்த ஆவணங்களை பரிசீலனை செய்து வழக்கானது கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. மேற்படி அழைப்பாணையினை பெற்று எதிரியானவர் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த தினத்தினில், வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் குற்றவியல் நடைமுறை சட்ட பிரிவு 207 கீழ் எவ்வித காலதாமதமின்றி இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

4. அரசுத்தரப்பினில் தாக்கல் செய்திருந்த இறுதியறிக்கை மற்றும் அதனுடன் இணைக்கப்பட்டிருந்த ஆவணங்களை பரிசீலனை செய்து, இருதரப்பினரையும் கேட்டறிந்ததில் எதிரியானவர் குற்றங்கள் செய்துள்ளார் என்று அனுமானிப்பதற்கு போதுமான ஆதாரங்கள் அமைந்திருந்த காரணத்தினால் எதிரிக்கு எதிராக இந்திய தண்டனை சட்டப்பிரிவுகள் 294(b), 324, 506(ii) பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டுகள் வனையப்பட்டு, மேற்படி குற்றச்சாட்டுகளானது எதிரிக்கு படித்துக்காட்டி விளக்கப்பட்டபோது எதிரியானவர் தனக்கு எதிராக வனையப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை மறுத்துரைத்து வழக்கினை விசாரணை செய்திட வேண்டும் என கோரியதன் அடிப்படையில் இவ்வழக்கானது விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

M NAGAPPAN
Digitally signed by M NAGAPPAN
Date: 2022.12.19 15:56:51 +0530

5. இவ்வழக்கில் அரசுத்தரப்பு சாட்சிகளாக அ.சா.1 முதல் அ.சா.6 ஆகியோர் விசாரணை செய்யப்பட்டு மேற்படி சாட்சியங்களின் வாயிலாக அ.சா.ஆ-1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. சான்றுபொருட்கள் ஏதும் அரசு தரப்பினில் குறியீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

6. **அரசுத்தரப்பு சாட்சியங்களின் சுருக்கம்** :

கடந்த 04.07.2021 தேதியன்று இரவு சுமார் 09.45 மணியளவில் பாப்பாகோவில் ஆர்ச் அருகே அ.சா.1 - பழனி மற்றும் அவரது அத்தை மகனான அ.சா.2 - அருண்குமார் ஆகியோர்களை யாரோ அடையாளம் தெரியாத நபர் பின்னால் இருந்து தள்ளிவிட்டிருந்ததாகவும், வழக்கு சம்பவ காலத்தினில் இவ்வழக்கின் எதிரியுடன் மனக்கசப்பு இருந்து வந்திருந்த காரணத்தினால், இவ்வழக்கின் எதிரியானவர் திட்டமிட்டு தாக்கியிருக்ககூடும் என்ற அனுமானத்தின் பேரில் அ.சா.1 - பழனி என்பவரால் அளிக்கப்பட்டிருந்த புகார்வாக்குமூலத்தின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்டிருந்த முதல் தகவலறிக்கை வாயிலாக விசாரணை அதிகாரியானவர் சம்பவ இடத்தினில் சாட்சிகளிடம் விசாரணை மேற்கொண்டு வழக்காவணங்களை பரிசீலனை செய்து, எதிரிக்கு எதிராக இவ்வழக்கின் இறுதியறிக்கையினை தாக்கல் செய்துள்ளதாக குறிப்பிட்டு அரசுத்தரப்பில் சாட்சியங்கள் முன் வைக்கப்பட்டுள்ளன.

7. அரசுத்தரப்பில் முன்வைக்கப்பட்டுள்ள சாட்சியங்களை எதிரிக்கு பாதகமாக அமைந்துள்ள சூழ்நிலைகளை குறித்து எதிரியிடம் குற்றவியல் நடைமுறை சட்டப்பிரிவு 313 (i) (b) ன் கீழ் எடுத்துரைத்து வினவியபோது எதிரியானவர் அரசுத்தரப்பில் பொய்சாட்சியங்கள் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும், அரசுத்தரப்பில் பொய்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், எதிரி தரப்பில் விசாரணை செய்திட எவ்விதமான சாட்சியங்களோ அல்லது சான்றாவணங்களோ கிடையாது என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே எதிரி தரப்பினில் எவ்விதமான சாட்சியங்களும் விசாரணை செய்யப்பட்டு, எவ்விதமான ஆவணங்களோ அல்லது வழக்கு சொத்துக்களோ குறியீடு செய்யப்படவில்லை.

8. இருதரப்பும் வாதங்களும் கேட்கப்பட்டது. சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் சீராய்ந்து பரிசீலனை செய்யப்பட்டன.

M NAGAPPAN

Digitally signed by M NAGAPPAN
Date: 2022.12.19 15:56:58 +0530

9. இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை யாதெனில் எதிரிக்கு எதிராக இந்திய தண்டனை சட்டப்பிரிவுகள் 294(b), 324, 506(ii) ஆகிய பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பினால் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதே ஆகும்.

10. இவ்வழக்கு சம்பவத்தினில் பாதிக்கப்பட்டிருந்ததாக அரசு தரப்பினில் சொல்லப்படும் அ.சா.1 - பழனி மற்றும் அ.சா.2 - அருண்குமார் ஆகியோர் தங்களது சாட்சியத்தினில், கடந்த 04.07.2021 தேதியன்று இரவு சுமார் 09.45 மணியளவில் பாப்பாகோவில் ஆர்ச் அருகே அ.சா.1 - பழனி மற்றும் அவரது அத்தை மகனான அ.சா.2 - அருண்குமார் ஆகியோர்களை யாரோ அடையாளம் தெரியாத நபர் பின்னால் இருந்து தள்ளிவிட்டிருந்ததாகவும், வழக்கு சம்பவ காலத்தினில் இவ்வழக்கின் எதிரியுடன் மனக்கசப்பு இருந்து வந்திருந்த காரணத்தினால், இவ்வழக்கின் எதிரியானவர் திட்டமிட்டு தாக்கியிருக்ககூடும் என்ற அனுமானத்தின் பேரில் புகார்வாக்குமூலமானது எதிரிக்கு எதிராக அளிக்கப்பட்டுவிட்டதாக குறிப்பிட்டு சாட்சியமளித்துள்ளனர். ஆனால் மேற்படி நிகழ்வினில் எதிரியின் பங்களிப்பு ஏதுமில்லை என தெரியவந்துள்ள காரணத்தினால் எதிரியுடன் சமாதானமாகி சமாதான மனுவினை இந்நீதிமன்றத்தினில் தாக்கல் செய்துள்ளதாகவும் குறிப்பிட்டு சாட்சியம் அளித்துள்ளனர். அதுமட்டுமல்லாது வழக்கு சம்பவத்தினில் காயம்பட்டிருந்ததாக சொல்லப்படும் அ.சா.1 - பழனி மற்றும் அ.சா.2 - அருண்குமார் ஆகியோர் அரசுத்தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காமல் பிறழ்சாட்சியாக மாறியுள்ள நிலையினில், வேறு எந்த நபர்களும் அரசு தரப்பினில் வழக்கு சம்பவத்தினை நிரூபணம் செய்திட விசாரிக்கப்பட்டிருக்கவில்லை. அதுமட்டுமல்லாது பிறழ்சாட்சிகளாக பாவிக்கப்பட்டுள்ள சாட்சிகளை, அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ள போதிலும் அரசு தரப்பிற்கு ஆதரவாக எவ்விதமான சாட்சியமும் அரசு தரப்பு குறுக்கு விசாரணையில் அளித்திருக்கவில்லை.

M NAGAPPAN

Digitally signed by M NAGAPPAN
Date: 2022.12.19 15:57:06 +0530

11. இவ்வழக்கில் முதல் தகவலாளியான (first informant) பழனி (அ.சா.1) கொடுத்த புகார்வாக்குமூலத்தினை பெற்று விசாரணை அதிகாரியானவர் சாட்சிகளின் முன்னிலையில் மாதிரிவரைபடம், பார்வைமகசர் தயார் செய்து சாட்சிகளிடம் விசாரணை செய்து, விசாரணையின் முடிவின் அடிப்படையில் எதிரிக்கு எதிராக விசாரணை அதிகாரியானவர் இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ள சங்கதிகள் குறித்து அ.சா.6 - உதவி ஆய்வாளர் - ஸ்ரீதரன் அவர்கள் சாட்சியம் அளித்துள்ளார்.

12. வழக்கு சம்பவத்தினில் காயம்பட்டிருந்ததாக சொல்லப்படும் அ.சா.1 - பழனி மற்றும் அ.,சா.2 - அருண்குமார் ஆகியோர் உட்பட அரசு தரப்பு சாட்சிகள் எவருமே அரசுத்தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளித்திருக்காமல், எதிரி மீதிருந்த சந்தேகத்தின் காரணமாக அனுமானத்தின் பேரில் புகார்வாக்குமூலம் அளிக்கப்பட்டிருந்ததாகவும், தற்போது இருதரப்பினரும் சமாதானம் அடைந்துவிட்டதாக குறிப்பிட்டு சாட்சியம் அளித்துள்ள நிலையில், இவ்வழக்கின் விசாரணை அதிகாரி மேற்கொண்ட விசாரணை நடைமுறை தொடர்பான சாட்சியத்தை மட்டும் முன்வைத்து எதிரியை தண்டிக்க முற்படுவது இயற்கை நியதிக்கு முரணானதாகும். ஏனெனில் விசாரணை அதிகாரி மேற்கொண்டுள்ள விசாரணை நடைமுறை தொடர்பான சாட்சியத்தின் வாயிலாக, வழக்கு சம்பவத்திற்கு பின்னிட்டு நடந்த நிகழ்வுகள் மற்றும் விசாரணை நடைமுறையினை ஊர்ஜிதம் செய்ய இயலுமே தவிர வழக்கின் நிகழ்வுகளை பற்றியோ அல்லது வழக்கு சம்பவத்தில் எதிரிக்குண்டான பங்களிப்பு குறித்தோ எவ்விதமான தீர்வும் காண இயலாது. எனவே எதிரிக்கு எதிராக வனையப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளானது அரசு தரப்பினால் உரியவகையில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

13. முடிவாக, எதிரிக்கு எதிராக இந்திய தண்டனை சட்டப்பிரிவுகள் 294(b), 324, 506 (ii) ஆகிய பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு அரசுத்தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்ற காரணத்தினால், சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து, இவ்வழக்கின் எதிரியான காளிதாஸ் என்பவர் இவ்வழக்கினில் குற்றவாளி கிடையாது என தீர்மானித்து கு.வி.மு.ச. பிரிவு 248 (1) கீழ் எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளித்து உத்தரவிடப்படுகிறது.

M NAGAPPAN

Digitally signed by M NAGAPPAN
Date: 2022.12.19 15:57:14 +0530

14. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படாத காரணத்தினால் வழக்கு சொத்துக்கள் குறித்த உத்தரவு ஏதும் பிறப்பிக்கப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து - தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பிறகு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2022-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 19 ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

M NAGAPPAN Digitally signed by M NAGAPPAN Date: 2022.12.19 15:57:22 +0530

நீதித்துறை நடுவர் எண் 1,

நாகப்பட்டினம்.

**1. அரசுத்தரப்பு சாட்சிகள்** :-

| | |
|---|---|
| அ.சா.1 | திரு. பழனி |
| அ.சா.2 | திரு. அருண்குமார், |
| அ.சா.3 | திரு. கோபு, |
| அ.சா.4 | திரு. மகேஸ்வரன், |
| அ.சா.5 | திரு. பாப்பையன், |
| அ.சா.6 | திரு. ஸ்ரீதரன் - காவல் உதவி ஆய்வாளர்., |

**2. அரசுத்தரப்பு சான்றாவணங்கள்** :-

| | |
|---|---|
| அ.சா.ஆ.1 | புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.2 | பிரிவு 320 கு.வி.மு.ச. மனு |
| அ.சா.ஆ.3 | பார்வைமகசரிலுள்ள அ.சா.3 ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.4 | பார்வைமகசரிலுள்ள அ.சா.4 ன்கையொப்பம் |
| அ.சா.ஆ.5 | முதல் தகவல் அறிக்கை, |
| அ.சா.ஆ.6 | பார்வைமகசர் |
| அ.சா.ஆ.7 | மாதிரிவரைபடம். |
| அ.சா.ஆ.8 | பழனி என்பவருக்குரிய விபத்துபதிவேடு |
| அ.சா.ஆ.9 | பழனி என்பவருக்குரிய காயச்சான்று |

**3. எதிரிதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** : இல்லை

**4. அரசுத்தரப்பு சான்று பொருள்** : இல்லை

M NAGAPPAN Digitally signed by M NAGAPPAN Date: 2022.12.19 15:57:31 +0530

நீதித்துறை நடுவர் எண் 1,

நாகப்பட்டினம்.

**பின் குறிப்பு** :

1. வழக்கு விசாரணையின்போது எதிரி நீதிமன்ற பிணையில் இருந்தார்.
2. வழக்கின் முடிவு காவல் துறைக்கு தெரிவிக்கப்பட்டது.
3. வழக்கு விசாரணையின்போது எந்த ஒரு சாட்சியம் மூன்று நாட்களுக்கு மேல் நீதிமன்றத்தில் ஆஜராகி இருக்கவில்லை.